பக்கங்கள் எட்டு

விலைரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
... படிப்பகம்

வலம்புரி
VALAMPURI

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
கிறிஸ்தவம்
பகுதி 1
மாதிரி வினாத்தாள்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 2[illegible] வியாழக்கிழமை (7-9-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 262

★ கொழும்பு நகருக்குள் புலிகளின் தாக்குதல் படை

# அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள்

# பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏற்பாடு

(கொழும்பு விசேட நிருபர்)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தலைநகர் கொழும்பிலும், அதனைஅண்டிய பிரதேசங்களிலும் எந்நேரமும் விடுதலைப் புலிகள் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சக் காரணமாக அரசியல் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள், அமைச்சர்களை பொது வைபவங்கள், கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறும், அவதானமாக இருக்குமாறும பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒக்டோபர் மாதம் 10ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன் விடுதலைப் புலிகள் தலைநகர் கொழும்பிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் திடீர் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் காரணமாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு கட்ட

(8ஆம் பக்கம் பார்க்க

## 2000ம் ஆண்டில் 285 சடலங்களை செஞ்சிலுவைச் சங்கம் ஒப்படைத்தது

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் காரணமாக இவ்வாண்டின் ஆரம்பம் முதல் இன்று வரையான காலப்பகுதியில் இராணுவத்தினரின் 203 சடலங்களையும், விடுதலைப்புலிகளின் 82 சடலங்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒப்படைத்துள்ளது.

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் ஹர்ஸா குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.(ந)

## லங்கா முடித பயணிகள் கப்பல் நாளை பயணமாவதில் முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

லங்கா முடித்த பயணிகள் கப்பல் சேவை நாளை 8 ஆம் திகதி இடம்பெறுமா? என்பது பற்றி இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை என யாழ் சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

லங்கா முடித கப்பல் சேவை நாளை இடம் பெறுமாயின் அதுபற்றி நாளைய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமாணியின் தேசியப் பட்டியலை தேர்தல் ஆணையாளர் நிராகரித்தார்

(கொழும்பு)

ஸ்ரீமாணி அத்துலத் முதலியின் சுயேட்சைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட தேசியப்பட்டியலை தேர்தல் ஆணையாளர் நிராகரித்துள்ளார்.

உரியநேரத்திற்குள்தேசியப் பட்டியல் தாக்கல் செய்யப் படாததனாலேயேமது நிராகரிக்கப்பட்டதாக தேர்தல்

(8ஆம்பக்கம் பார்க்க)

## சபாநாயகர், லக்ஸ்மன் இருவருக்கும் பொதுஜன. ஐ. முன்னணியில் இடமில்லை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலிலோ, அல்லது தேசிய பட்டியலிலோ சபாநாயகர் கே. பி. இரட்நாயக்காவினதும் பௌத்த கலாசார அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடியினதும் பெயர்கள இடம்பெறவில்லையென

(8 ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம்

## புலிகளின் 36 சடலங்கள் நீர்வேலியில் வைத்து ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதியில் படையினருடன் ...

புலிகளின் 36 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று விடுதலைப் புலிக

## சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை ஒரு போதும் ஏற்க மாட்டோம்

## புலிகளின் 36 சடலங்கள் நீர்வேலியில் வைத்து ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் 36 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தது.

நீர்வேலி வாய்க்கால் தரவை பகுதியில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப்பிரதிநிதி றொம்றோ

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை ஒரு போதும் ஏற்க மாட்டோம்

### பௌத்த மகாசங்கம் ரணிலிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் தீர்வுத்திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை அதனை ஏற்றுக் கொள்ளவும் மாட்டோம் நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும் இவ்வாறு மகாசங்கத்தினர் ரணில் விக்கிரமசிங்காவைக் கேட்டுள்ளனர்.

கண்டிக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்கா அங்கு பௌத்த மகாசங்கத்தினரைச் சந்தித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு ரணிலிடம் கேட்டுள்ளனர்.

இதனை அடுத்து அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவருவேன் என ரணில் உறுதி அளித்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நேரடி மோதலின் போது உயிரிழந்த புலிகள் விபரம்

[வவுனியா]

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் கடந்த ஞாயிறு முதல் இரு தினங்கள் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்:

அவர்களின் விபரம் வருமாறு:—

- பூமகள் (யோகராசா புஸ்பராணி) யாழ்ப்பாணம்
- 2ம் லெப். கலைநங்கை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தமிழ் பாடசாலையில் உயர்தர மாணவர்கள் மோதல்

(வவுனியா)

வவுனியா தமிழ் தேசிய ஆண்கள் உயர்தரப் பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கிடையே பலத்த மோதல் சம்பவங்கள் கடந்த இரு தினங்களாக நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரம் 12, 13 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இம் மோதலில் மாணவர்கள் சிலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரு தரப்பினரும் தடிகள் பொல்லுகள் சகிதம் ஒருவரையொருவர் தாக்கியதனால் பாடசாலை ஆசிரியர்களால் இம்மோதலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

மாணவர்கள் சிலர் தாம் அணிந்திருந்த சேட்டை நீளக்காற்சட்டைக்கு வெளியே விட்டதனாலேயே இம்மோதல்கள் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

## யாழ். நகரை அலங்கரிக்கும் தேர்தல் சுவரொட்டிகள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை ஒட்டி கொழும்பு நகர்ப் பகுதியில் அரசியல் கட்சிகளினால் ஒட்டப்பட்ட சுவர் ஒட்டிகளும் பதாதைகளும் பொலிஸாரினால் நேற்று அப்புறப்படுத்தப்பட்டது.

இதேவேளை யாழ்.நகரில் குறிப்பிட்டசில அரசியல் கட்சிகளின் தேர்தல்தொடர்பான சுவரொட்டிகள் யாழ். நகரிலும் அதற்கு வெளியேயும் பரவலாக ஒட்டப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (வ)

## யுத்த விமானங்கள் நேற்றும் சுற்றின

குண்டுவீச்சு விமானங்கள் உலங்கு வானூர்த்திகள் யாழ் குடா நாட்டு வான்பரப்பில்

[8 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பி.பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் 'பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோரை தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளனர். (த)

வலிகாமம் பகுதியில்

# வேகமாக பரவும் மலேரியா நோய்

# இடம்பெயர்வோர் காரணமாம்

(தென்மராட்சி)

வலிகாமம் பிரதேசத்தில் மலேரியா நோய் மிக வேகமாகப் பரவிவருவதாக சுகாதார வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

வலிகாமம் பிரதேசத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் மலேரியா நோய்க்குச் சிகிச்சை பெற வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை மலேரியா நோயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் யாவும் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகின்றது.

மேலும், தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து வலிகாமம் பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களாலேயே இந்நோய் இப்பகுதியில் பரவிவருவதாகவும் இப்போது கூறப்பட்டுவருகின்றது. (க-(77)

## தபால் பொதிகள் வந்தன

பருத்தித்துறையை நேற்று வந்தடைந்த செஞ்சிலுவைச் சங்க கப்பலில் யாழ். குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 104 தபால்பொதிகள் எடுத்து வரப்பட்டதுடன் 36 நோயாளர்களும் வந்தனர்.

இதேவேளை இங்கிருந்து வெளியூர்களுக்கான ஐம்பது தபால் பொதிகள் அனுப்பட்டுள்ளது.

இங்கு எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் அனேகமாக இன்று தரம்பிரித்து விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (க-3)

அகில இலங்கை

## கர்நாடக இசைப் போட்டியில் பாராட்டுப் பெறும் யாழ். மாணவன்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பவளவிழா நிகழ்வுகள் இம்மாதம் 2ந் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவை யொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கலை, கலாசாரப் போட்டிகளில் கர்நாடக இசை (வாய்ப்பாட்டு) மிருதங்கம் ஆகிய இரண்டு துறைகளிலும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதியைச் சேர்ந்த செல்வன் சிவானந்தன் அகிலன் முதலாம் இடங்களைப் பெற்று தலா பத்தாயிரம் ரூபா பணப் பரிசுடன் இரண்டு தங்கக் கேடயங்களையும் இவ்விழாவில் பரிசாக பெற்றுக் கொண்டார்.

யாழ். பரியோவான் கல்லூரியின் மாணவனாகிய இவர் சங்கீதபூஷணம் என். இலகநாயகம் போல், சங்கீத பூஷணம் எஸ். சிவஞான சேகரம் ஆகியோரிடம் கர்நாடக இசையையும், கலாவித்தகர் கே. கண்ணதாசன் அவர்களிடம் மிருதங்கத்தையும் இசைஞானபூபதி ஆர். எஸ். கேசவமூர்த்தி அவர்களிடம் வயலினையும் சாஸ்திரீய முறைப்படி பயின்றவர். இவர் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட, மாகாண போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி முதல் இடங்களைப் பெற்றதோடல்லாமல் இசை நிகழ்ச்சிகளையும் நடத்தி பலரது பாராட்டுதல்களையும் பெற்றவர்.

மேலும் சென்ற வருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையில் கணிதத்துறையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்று மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## போதைப் பொருள் மீட்பு

(கொழும்பு)

கொழும்புமருத்துவமனைக்கருகில் போதைவஸ்து கடத்தல் நபர் ஒருவரை, போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் கைது செய்துள்ளது.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ 400 கிராம் நிறையுடைய 130 கஞ்சா பொதிகளை இவர்வசமிருந்து மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றில் மேற்படி நபர் ஆஜர் செய்யப்படவுள்ளார். (உ)

## சாமிஜியின் 'இது இந்துமதம்' நூலை உடனே தடைசெய்ய வேண்டும்

### ஆலய பிரதம குரு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இதுஇந்துமதம் என்னும் நூலை உடனே தடை செய்ய வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு அவசர வேண்டுகோளை நாரித்தோட்டம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ என் சுரேஷ் சர்மா விடுத்துள்ளார்.

தொணியகலஇந்துமக்களின் சார்பில் விடுக்கப்பட்ட அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அவர் தமது எதிர்ப்பில்; அப்பதிப்பு இந்து மதத்தின் தத்துவங்களையும் அதன் சடங்குகளையும் அவமதித்துத் தரக்குறைவாகவிமர்சிப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதுவும் இந்துசமய விவகாரத்திணைக்களத்தினால் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டமையை மிகவிசனத்துடன் வெளிப்படுத்திய அவர் இந்து மதத்தின் வளர்ச்சியைச் சீரழிக்கும் இப்புத்தகத்தைப் பிரபலப்படுத்துவது இந்து சமய விவகார திணைக்களத்திற்கு ஒவ்வாத செயல் என்றும் கூறியுள்ளார்.

உடனே இப்புத்தக விற்பனைக்கு தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு மேலும் அவர் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி புத்தகம் கொழும்பில் உள்ள அரவிந்தன் பதிப்பகத்தால் பிரசுரிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-106)

## இடம்பெயர்ந்த மாணவர் பாடசாலைகளில் மயங்குகின்றனர்

(இணுவில்)

இடம்பெயர்ந்த மாணவர்கள் பலர் பாடசாலைகளில் மயங்கி விழும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றது.

சுன்னாகம், சுதுமலை, உடுவில் பகுதிப் பாடசாலைகளிலேயே இச்சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

ஆரம்ப கல்விப் பாடசாலைகளில் அதிகம் இடம்பெறும் இச்சம்பவத்திற்கு குடும்ப வறுமைநிலையே காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்குச் செல்லும் போது இம்மாணவர்கள் காலை உணவை உட்கொள்ளாமல் செல்வதாகவும், பாண் வாங்குவதற்குக்கூட இவர்களின் பொருளாதார நிலை மோசமாகவுள்ளதாகவும் பெற்றோர் மத்தியில் கூறப்படுகின்றது.

இதற்கு உதவுமுகமாக வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் தங்களால் இயன்ற உதவிகளை ஆற்றுகின்றனர்.

இவ்விடயத்தில் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் உதவிபுரியவேண்டுமென பலர் எதிர்பார்க்கின்றனர். (த-49)

இலங்கையில்

## மத்திய, தென்பகுதி மாகாணங்களில் 159 தமிழ் வேட்பாளர்கள் போட்டி

(கொழும்பு)

தமிழ்வாக்காளர் அதிகமாகக்காணப்படும் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் 6 தேர்தல் மாவட்டங்களில், 159 தமிழ்வேட்பாளர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

கண்டி, நுவரெலியா, பதுளை இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை ஆகிய 6 மாவட்டங்களிலேயே இவர்கள் போட்டியிடவுள்ளனர்.

இந்தவகையில், கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் 315 பேரில் 43 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் 230 பேரில் 86 பேரும் தமிழ் வேட்பாளர்களாவர்.

இரத்தினபுரியில் 4 தமிழ் வேட்பாளர்களும், மாத்தளையில் 15 தமிழ் வேட்பாளர்களும், கேகாலையில் 11 தமிழ் வேட்பாளர்களும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. (உ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
கலைப்பீடம்
கலைப்பீட
விரிவுரைகளும்
புகுமுக
மாணவர்களுக்கான
வகுப்புக்களும்
கல்வியாண்டு
1999 / 2000

1999/2000 கல்வியாண்டிற்கு கலைப் பீடத்திற்குத் தெரிவாகியுள்ள புதிய மாணவர்களுக்கான (க.பொ.த. உயர்தரம் 1998, 1999 கல்வியாண்டு 1999/2000, 2000/2001) வழிகாட்டல் வகுப்புக்கள செப்ரெம்பர் மாதம் 25ம் 26ம், 27ம் திகதிகளில் 9.30 மணிக்கு மூன்று பிரிவுகளாக பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். மாணவர்கள் விபரங்களை 20.09.2000 திகதி முதல் கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். இம்மாணவர்களுக்கான ஆங்கில தகுதிகாண் பரீட்சைகள் 29.09.2000 அன்று நடைபெறும்.

இரண்டாம் வருட மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள 02.10.2000 திகதி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

கல்வியாண்டு 1999/2000த்திற்கான அனைத்து வருட மாணவர்களுக்கும் விரிவுரைகள் யாவும் 02.10.2000 அன்றுஆரம்பமாகின்றன

பதிவாளர்.
06-09-2000. (கி-774)

## கிருமிநாசினி அருந்தி மரணமானோர் குப்பிழான் பகுதியில் அதிகரிப்பு

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் குப்பிழான் பகுதியில் அண்மைக்காலமாக கிருமி நாசினி அருந்தி மரணமடைவோர் தொகை வெகுவாக அதிகரித்து காணப்படுகிறது.

இப் பகுதியில் வசிப்போர் பெரும்பாலும் விவசாயிகளாக இருப்பதனால் தமது தோட்டப் பயிர் செய்கைக்கு கிருமி நாசினிகளை இலகுவாக பெற்றுக் கொள்கின்றனர்.

குடும்பங்களுக்குள் ஏற்படும் சிறு சச்சரவுகளுக்கு தீர்வு காண்பதற்காக பலர் இக்கிருமி நாசினிகளைப் பயன்படுத்துவதாகவும், அதனால் பலகுடும்ப பெண்கள் விதவைகளாக இருப்பதாக கிராம சேவையாளரது புள்ளி விபரங்கள் தெரியப்படுத்துகின்றன.

இப்பகுதி மக்களிற்கு இது சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும் என்றுசமூகநலன் விரும்பிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (த-49)

## யுத்த அனர்த்தத்தினால் இடம்பெயர்வோருக்கு ஈ. பி. டி. பி யினர் வாகன வசதி

(யாழ்ப்பாணம்)

தற்போதையயுத்த அனர்த்தத்தினால் குருநகர், கொழும்புத்துறை, திருநகர் போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் வாகன வசதிசெய்து வருகின்றனர்.

திருநகர் பகுதிகளில் நேற்று நண்பகல் வீழ்ந்த ஷெல்களையடுத்து அப்பகுதிகளில் இதுவரை காலமும் இடம்பெயராதிருந்தோர் பாதுகாப்பான இடங்களை தேடி இடம்பெயர்ந்துள்ளனர்.

யாழ். புனித பத்திரிசியார் பாடசாலையில் பாதுகாப்பிற்காக தங்கியிருந்த மக்களும் இடம்பெயர்ந்து வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

மக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து அப்பகுதி வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றது. இதே வேளை கொய்யாத்தோட்டம் பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்ததாக கூறப்படுகின்றது. (க - 12)

## பாடசாலையில் அகதிகள்

(கல்வயல்)

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, குருநகர், பாஷையூர், நாயன்மார்க்கட்டு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் பலர் இன்னமும் பல பாடசாலைகளிலே தங்கியுள்ளனர்.

கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம், சுதுமலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுதுமலை சின்மயாபாரதி வித்தியாலயம், கரவெட்டி றோ.க பாடசாலை ஆகியவற்றில் இடம்பெயர்ந்த பலர் தங்கியுள்ளனர்.

பாடசாலை வளாகம் பல சுகாதாரச் சீர்கேடுகளையும் மாணவர்கல்வி நிலையில் பல சிக்கல்களையும் இதன் காரணமாக எதிர்நோக்குகிறது. (த-111)

## வல்வையில் திருட்டு மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரிப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி, மானான்காணை, கம்பர்மலை, கொம்மாந்தறைப் பகுதிகளில் திருட்டு மின்சாரம் பெறும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதனால்இலங்கைமின்சார சபையால் மின் வாடிக்கையாளர்களுக்கு ஒழுங்காகமின்சாரத்தை வழங்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

## வெள்ளிரத வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் வெள்ளிரத வெள்ளோட்ட விழா இன்று 07ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது (12-120)

### இனப்பிரச்சினை விவகாரத்தில்

# ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கால இழுத்தடிப்பை மேற்கொண்டார்

[தென்மராட்சி]

அரசியல் தீர்வுப் பொதி தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாற்பது தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். ஆயினும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது எந்த விதமான பயனும் கிட்டவில்லை. ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்றே இது விடயத்தில் தேவையற்ற கால இழுத்தடிப்புகளை மேற்கொண்டு வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகள் கிடைக்காமல் இருக்கும் பொருட்டு செயற்பட்டிருந்தார். இந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளது. அப்படியான கட்சியினர் எந்த முகத்துடன் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க வந்துள்ளார் என்பது ஆச்சரியமாகவுள்ளது என ஸ்ரீ. ல. சு. கட்சி அமைப்பாளர் வேல்முருக தங்கராசா தெரிவித்தார்.

யாழ். வேம்படி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளைப் புறந்தள்ளிவிட்டு எந்தவொரு தீர்வுத் திட்டமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அமைக்கப்படும் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி சந்திரிகாவினால் அரசியல் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு மூன்று மாத காலத்துக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் வெளிநாடொன்றில் பேச்சுவார்த்தை நடத்தப்படக் கூடும்.

இம்மாநாட்டின் போது வேட்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்டச்செயலாளருமாகிய. சிவஞானம், ஆழ்வாய்ப்பிள்ளை கந்தசாமி, திருமதி. ஜெயந்தி பரமலிங்கம், அப்துல் அலிசுல்தான் மொகைதீன் ஆகியோரும் சமூகமளித்தனர்.

மேலும் 1970 ம் ஆண்டு காலத்தில் நாம் யாழ்ப்பாணத்தில் நாட்டிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எனும் விதை வளர்ந்து இன்று ஒரு ஆலமரமாக வளர்ந்துள்ளது. அக்காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா வினால் அறிமுகப்படுத்திய விவசாயத் திட்டம் எமது மக்களுக்கு நல்ல பயனைத்தந்தது. அதனால் யாழ்ப்பாண மாவட்டம் செழித்தும், கொழித்தும் இருந்தது. இதனை யாரும் மறக்கமுடியாது.

அதேபோல அந்தக்கால கட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை சிறிமாமோ தலைமையிலான அரசாங்கமே கொண்டுவந்தது. மீன்பிடி, விவசாயம் மற்றும் கைத்தொழில் திட்டங்கள் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் பயன் அடைந்துள்ளனர். பல்லாயிரக் கணக்கான இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்கியிருந்தோம். இவை நாம் மேற்கொண்ட சாதனைகள்.

**யாழ். நூலகத்தை எரித்தனர்**

தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகள் கிடைத்துவிடும் என தீர்வுப் பொதி விடயத்தில் எதிர் மறையாகச் சொல்லப்பட்டதுடன்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பெரும் சொத்தாகவிருந்த யாழ் பொது நூலகத்தினைக் குண்டர்களைக் கொண்டு எரித்தவர்களுமாகிய ஐக்கிய தேசியக் கட்சியினர் இப்போது எந்த முகத்துடன் தமிழ் மக்களிடம் வாக்குகளைக்கேட்டு வந்துள்ளனர். என நினைக்கும்போது வேடிக்கையாக இருக்கின்றது.

இவர்களுக்கு யாழ். மக்கள் தகுந்த பதிலடியை நிச்சயம் கொடுப்பார்கள் என நம்புகின்றோம். ஜனாதிபதி சந்திரிகாவினால் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்துக்கு ஐக்கியதேசியக்கட்சி ஆதரவினை வழங்கியிருந்தால் தீர்வுத்திட்டத்தில் எமக்கு நிச்சயமாக வெற்றி கிடைத்திருக்கும். தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும்.

இந்த தீர்வுத்திட்டம் முழுமையாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்று நாம் சொல்வதற்குத் தயாராகவில்லை. இதைப் பற்றி நாம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை செய்திருந்தோம். அச்சமயத்தில் இது விடயமாக நாம் மேலும் மேலும் பேசுவோம். ஒரு முழுமையான தீர்வுத்திட்டத்தினை குறைகளின்றி உருவாக்குவோம் எனக் கூறியிருந்தார்.

தீர்வுத்திட்டத்துக்கு பௌத்த மத பீடங்களும் ஒரு பக்கமும் சிங்கள இனவாதிகள் மறுபக்கமும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணி, பின்னணியுடன் போராட்டங்களை நடத்தினர்.

**நிராயுத பாணிகள்**

இன்றைய சூழ் நிலையில் நாம் நிராயுத பாணிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ளோம். எங்களிடம் கொள்கை இருக்கின்றது. செயல் திட்டங்கள் இருக்கின்றன. மக்களிடம் நம்பிக்கை இருக்கின்றது. நாம் மக்களுக்காக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும். இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காகவும் இந்தப் பூமியிலே இரத்தக்களரி ஏற்படாது தடுப்பதற்காவும், கொடிய யுத்தம் தொடர்ந்து இடம் பெறுவதைத் தடுக்கவும் எம் மத்தியில் இருந்து 5 பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்கள் தேர்ந்தெடுப்பார்களாயின் இது சரித்திரத்திலே பதியப்படும் நிகழ்வாக இடம்பெறும் என்றார். [க-77]

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப் படக் காட்சித் தொடரில் இரண்டாவதாக பிரான்சிஸ் போர்ட் கோப்போலாவின் அபோகலிப்ஸ் நௌவ் (இன்றைய அருள் வெளிப்பாடு) எனும் திரைப்படம் எதிர்வரும் சனிக்கிழமை 09-09-2000 அன்று மு. ப 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## இராசி பலன்

7.9.2000
(ஆவணி 22. வியாழன்)
நவமி பி. ப 3 31 வரை
மூலம் பி. இ. 12.29 வரை
இராகுகாலம்
1.34- 3.04
சுபநேரம் 7.34- 9.04
ஆவணி மூலம்

**மேடம்**
மனப்பதட்டம், காரிய நன்மை, தந்தை வழி உறவு.

**இடபம்**
உறவினர்வெறுப்பு, அலைச்சல், பணவரவு, சிறு ரோகம்.

**மிதுனம்**
சுவாரஸ்யம், போசன சுகம், பொருள் வரவு, முயற்சி பலிதம்.

**கடகம்**
சந்தோசமான நிகழ்வு, தொழில் முயற்சி வெற்றி, சத்துரு ஜெயம்.

**சிங்கம்**
குடும்பக் கவலை, சிறு வியாதி, பணச் செலவு.

**கன்னி**
உறவினர் வெறுப்பு, வாகன சுகம், பொருள் வரவு.

**துலாம்**
பிரயாணம், எதிர்பாராத வருமானம், குடும்ப சுகம்.

**விருச்சிகம்**
காரியத்தாமதம், விதண்டாவாதம், செல்வாக்கின்மை.

**தனுசு**
தியாக சிந்தை, உடல்நலம் பிரயாணம்.

**மகரம்**
பிரயாண அலைச்சல், சயன சுகக் குறைவு, காரியத்தாமதம்.

**கும்பம்**
அதிக வருமானம், கீர்த்தி, குடும்ப சுகம்.

**மீனம்**
தொழில் அதிகாரம், பிரயாணம், காரிய வெற்றி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

### இருபாலையில்

## சிறுவர் பூங்கா அமைக்க முயற்சி

(கோப்பாய்)

இருபாலைச் சந்திக்கு அண்மையில் புதிய சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான காணி ஒன்றும் நீண்டகாலக்குத்தகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு நிதிகோப்பாய் பிரதேசசபை ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாக வலிகிழக்குப் பிரதேச சபைஉபதலைவரும், வலிகிழக்கு ஈ.பி.டி.பிஅமைப்பின் பொறுப்பாளருமானரவி தெரிவித்துள்ளார். (த-79)

### மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம்

# பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

## வெறிச்சோடிய நிலையில் நகரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் ... 1990 ஆம் ...

விழிப்புக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்ஹர்த்தாலுக்கு தமிழ், முஸ்லிம் ...

மேற்படி ஹர்த்தால் அனுஷ்டிப்பு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜரான கைதிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு சந்தர்ப்பங்களில் ...

★ ஐ. மனோகரன்
★ ஏ. நாகராசா

கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான காணி ஒன்றும் நீண்டகாலக்குத்தகைக்கு ஒப் பிரதேச சபைஉபதலைவரும், வலிகிழக்கு ஈ.பி.டி.பிஅமைப் பின் பொறுப்பாளருமானரவி தெரிவித்துள்ளார். (த-79)

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜரான கைதிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு சந்தர்ப்பங்களில் பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறை சிறையில் வைக் கப்பட்டிருந்த கைதிகளில் 16 பேர் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் யாழ். குடாநாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

இக்கைதிகளில் 6 பேர் நேற்று மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

யாழ் குடாவிற்கு அழைத்து வரப்பட்டோரின் விபரம் வருமாறு. நீதி மன்றில் ஆஜர் படுத்தப்பட்டோர்.

★ ஐ. மனோகரன்
★ ஏ. நாகராசா
★ என். ஜீவதாஸ்
★ கே. சாந்தகுமார்
★ எஸ். துஷாகாந்தன்
★ எஸ். ஜீவநேசன்
★ எஸ். ஏ. ராஜ்குமார்
★ பீ. தவரூபன்
★ அன்ரன் அமலதாஸ் லோறன்ஸ்
★ ஏ. ஆனந்தகுமார்
★ கே. கிருசானந்தன்
★ கே. விஜயகுமார்
★ எம். தனராஜா
★ ஜி. கமலதாஸ்
★ எஸ். கனிஸ்லொஸ்
★ எ. பி. ஸ்ரனிஸ்லொஸ்

(க-12)

# பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

# வெறிச்சோடிய நிலையில் நகரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் கடந்த 1990 ஆம் ஆண்டு காணாமல் போன வர்களை நினைவு கூரும் வகையில் நேற்று முன்தினம் அங்கு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்குப்பல்கலைக்கழக அகதிமுகாமில் தங்கியிருந்த பொதுமக்கள் 158 பேர், 1990 ஆம் ஆண்டு செப்ரெம் பர் மாதம் 5 ஆம் திகதி காணாமல் போயிருந்த மையை நினைவுகூரும் வகை லேயே இக் ஹர்த்தால் ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மக்கள் விழிப்புக்குழுவின் ஏற்பாட் டில் இடம்பெற்ற இக்ஹர்த் தாலுக்கு தமிழ்.முஸ்லிம் வர்த்தகர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந் தனர்.

இதனால் நகரமே வெறிச் சோடிக்காணப்பட்டதுடன், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் தமது விரிவு ரைகளைப் புறக்கணித்த காரணத்தினால் பல்கலைக் கழக செயற்பாடுகள் எவை யும் நடைபெறவில்லை என வும் தெரியவந்துள்ளது.

நகரமெங்கணும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு மிகவும் உணர்ச்சிபூர்வமாக மேற்படி ஹர்த்தால் அனுஷ் டிப்பு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், பாட சாலைகள் எவையும் இயங்க வில்லை. (உ)

## பூங்காவனத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல் வச் சந்நிதி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீனமுதல்வர் அரு ளுரையாற்றவுள்ளார். (செ


அரச அதிகாரிகளை சுதந்திரமாக இயங்க வைப்போம்
நிர்வாகத்திற்கு உற்சாகமூட்டி உத்வேகமளிப்போம்
அபிவிருத்திப் பணிகளை வேகப்படுத்தி நெறிப்படுத்துவோம்
பிராந்திய அபிவிருத்தியை முதன்மைப்படுத்தும் எம்மை ஆதரித்திடுவீர்!

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி. (புளொட் + ஈரோஸ்)

[1689]

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## கிறிஸ்தவம்

**மாதிரி வினாத்தாள் 1** **பகுதி - I**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
1-40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

1) புதிய இஸ்ராயேர் என அறிமுகப்படுத்துவது;
(1) முழு மனித குடும்பங்களே ஆகும்
(2) விண்ணுலக மாந்தரே ஆகும்
(3) மறை பரப்புச் சமூகத்தை ஆகும்
(4) திருச்சபை ஆகும்.

2) மனிதனுக்கு மீட்பு கிட்டுவது
(1) இறை இரக்கத்தினதும், அன்பினதும் செயற்பாட்டினால் ஆகும்
(2) மனிதன் இறைவனை வேண்டுவதனால் ஆகும்
(3) இறை வாக்கினர் மூலம் இறைவன் வாக்குறுதி கொடுத்ததினால் ஆகும்.
(4) மக்களிற்கு அளித்துள்ள இறை சட்டங்களை நிறைவேற்றுவதனால் ஆகும்

3) கிறிஸ்தவ வாழ்விற்கு அத்திவாரமாக வேண்டியது.
(1) பழைய ஏற்பாட்டு படிப்பினைகள் ஆகும்
(2) கிறிஸ்தவின் மனுவுடன் ஏற்கையாகும்
(3) புதிய ஏற்பாட்டுப் படிப்பினைகள் ஆகும்
(4) திடமான கிறிஸ்தவ ஆளுமையாகும்

4) நாம் கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்புக்கள் ஆவது
(1) உறுதி பூசுதலினால் ஆகும்
(2) திருமுழுக்கினால் ஆகும்
(3) நற் கருணையினாலாகும்
(4) குருத்துவத்தினால் ஆகும்

5) புனித பவுலின் படிப்பினையின் படி இறைவனின் அளவற்ற ஞானம் வெளிப்படுவது
(1) படைக்கப்பட்ட உலகு மூலமாகும்
(2) இறைவாக்கினர் மூலமாகும்
(3) திருச்சபையின் மூலமாகும்
(4) இறை வெளியீடுகள் மூலமாகும்

6) மதக்கலப்பு திருமணத்தால் ஏற்படும் துரதிட்ட விளைவு
(1) பங்கு சகோதர மக்கள் அவர்களை ஒதுக்குவார்
(2) பிள்ளைகளை கத்தோலிக்கப் பாடசாலை ஒன்றுக்கு சேர்க்க முடியாமற் போகும்
(3) பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் நல்லிணக்கம் தகர்ந்துவிடும்
(4) தம் உறவினரால் கைவிடப்படுவர்.

7) சிலுவையில் தாம் ஒப்புக்கொடுத்த பலியில் நாம் பங்குபெற கிறிஸ்துநாதர் நமக்கு அருளுவது
(1) குருத்துவத்தின் மூலமாகும்
(2) திருப்பலிப் பூசையின் மூலமாகும்,
(3) நற்கருணையின் மூலமாகும்
(4) திருமுழுக்கின் மூலமாகும்.

8) ''அஞ்சாதீர்கள் நீங்கள் என்னைக் கெடுக்க சதியாலோசனை செய்யாதீர்கள்? ஆனால் கடவுள் தீமையை நன்மையாக மாற்றினார்'' இவ்வாறு கூறியவர்
(1) யோசேப்பு (2) யோவான் (3) மோயீசன் (4) யாக்கோபு

9) தன் மரணத்தின் பின் றோசா மலர்களை மாரியாகப் பொழிவேன் எனக் கூறியவர்
(1) புனித அக்னெஸ் (2) புனிதசிசிலியா
(3) புனித திரேசாள் (4) புனித அன்னாள்

10) கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய இறைத்தூதுச் செய்தி கிடைத்தது
(1) கற்றோருக்கு (2) மக்கள் தலைவர்களுக்கு
(3) குருத்துவ மக்களுக்கு (4) பிரசித்தமற்ற மக்களுக்கு

11) புனித லூக்காஸ் தனது நற்செய்தியை என்ன மொழியில் எழுதினார்?
(1) எபிரேய (2) கிரேக்க (3) அரேபிய (4) இலத்தின்

12) சக்கரியாஸ்,
(1) யூத முதியோர் (2) யூத இறைவாக்கினர்
(3) யூதத் தலைவர் (4) யூதரு...

# பழைய தமிழ் திரைப்பட விழா இலங்கையில் முதன் முதலில்

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக பழைய தமிழ்த் திரைப்படவிழா நடைபெறவிருக்கிறது.

இதற்கான ஒழுங்குகளை, இந்திய தூதரகத்தின் அனுசரணையுடன் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகிறது.

இந்தவகையில், 50 வருடங்களின் முன் தயாரிக்கப்பட்ட இந்தியப்படங்கள் கொழும்பு, கண்டி திரையரங்குகளில் இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 3 ஆம் திகதிவரை திரையிடப்படவிருக்கிறது.

சிந்தாமணி, மங்கம்மா சபதம், வேலைக்காரி, மந்திரிகுமாரி, ராஜகுமாரி, அபூர்வ சகோதரர்கள், சந்திரலேகா ஆகிய திரைப்படங்கள் இக்காலங்களில் திரையிடப்படும்.

[உ]

# வல்லை, பொலிகண்டி பகுதியில் துரித கதியில் மீன்பிடித் தொழில்

## மலிவான விலையில் மீன்கள்

(கல்வயல்)

வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதியில் கடற்றொழில் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்படுவதாகதெரிவிக்கப்படுகிறது.

கட்டுமரங்கள், வள்ளங்கள் மூலம் மீன்கள் பிடிக்கப்படுவதனால் மீன்களை ஓரளவு மலிவான விலையில் பெறக்கூடியதாகவுள்ளது.

கூடுதலானோர் இத்தொழிலில் ஈடுபடுவதனால் வேலையில்லாப் பிரச்சினையும் ஓரளவு நீக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-111)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# தங்கியிருப்போருக்கு இன்று 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்போரில் 997 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

7 ஆம் 8 ஆம் திகதிகளில் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையினரால் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து மேற்படி பணம் வழங்கப்படவுள்ளது.

ஜே-94 தொடக்கம் 115வரை இலக்கம் உடையோர் 7 ஆம் திகதியும் ஜே- 116 தொடக்கம் ஜே- 128 வரை இலக்கம் உடையோர் 08 ஆம் திகதியும் மேற்படி கொடுப்பனவு பெறமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டோர் கிராம சேவை அலுவலரின் உறுதியுரையை பெறுதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# மட்டு. பாடசாலைகளில் இன்று பகிஷ்கரிப்பு போராட்டம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் படையினரால் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்டித்தும் கடந்த மாதம் 18ம் திகதி மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் விஜயதர்சனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனக் கோரியுமே இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம் பெறவுள்ளது. (ந)

# அமைச்சர் மீது தாக்குதல்

12) சக்கரியாஸ்,
(1) யூத முதியோர் (2) யூத இறைவாக்கினர்
(3) யூதத் தலைவர் (4) யூதகுரு

13) இம்மானுவேல் என்ற சொல்லின் பொருள்
(1) இறைவன் எம்மோடு என்பது
(2) இறைவன் எம்மை பாதுகாக்கின்றார் என்பது
(3) இறைவன் எமது மீட்பர் என்பது
(4) இறைவன் எமது வழிகாட்டி என்பது

14) திருவருட் சாதனங்களை ஏற்படுத்தியது ......
(1) அநாதைகளுக்காக (2) நோயாளிகளுக்காக
(3) வாழ்வோருக்காக (4) இறந்தோருக்காக

15) கத்தோலிக்கம் என்ற சொல்லின் பொருள்
(1) புனிதத்தன்மை (2) அப்போஸ்தலிக்கம்
(3) எல்லாக் காலத்திற்கும் உரித்தான தன்மை (4) எங்கும் நிறைந்ததன்மை

16) ஜென்ம பாவத்திற்கு உரிமை பெற்றிராத ஒரே ஒரு நபர்
(1) கிறிஸ்து நாதர் (2) தேவதாய்
(3) திருமுழுக்கு அருளப்பர் (4) புனித சூசையப்பர்

17) மீட்பின் வரலாறு தொடங்கியது
(1) கிறிஸ்துவின் பிறப்பின் பின் ஆகும்
(2) ஆபிரகாமின் அழைப்பின் பின்பாகும்
(3) மோயீசனைத் தெரிந்து கொண்டதன் பின்பாகும்
(4) ஸ்நாபக யோவானின் பிறப்பின் பின்பாகும்

18) பரிசுத்த ஆவி எம்மில் செயலாற்றுவது,
(1) ஆயர் மூலமாகும் (2) திருச்சபை மூலமாகும்
(3) உறுதி பூசுதல் மூலமாகும் (4) திருமுழுக்கின் மூலமாகும்

19) இஸ்ராயேலரின் முதல் அரசன்
(1) சவுலாகும் (2) சாமுவேலாகும் (3) தாவீதாகும் (4) சலமோனாகும்

20) வார்த்தை மனுவுருவத்தை நினைவூட்டுவது
(1) விசுவாசப் பிரமாணமாகும் (2) கர்த்தர் கற்பித்த செபமாகும்
(3) மூவேளைச் செபமாகும் (4) தமதிரித்துவ செபமாகும்

[நாளை தொடரும்]

# அமைச்சர் மீது தாக்குதல் சந்தேக நபர் நீதிமன்றில்

[கொழும்பு]

உல்லாசத்துறை அமைச்சர் சேனசிங்க தாக்கப்பட்ட முக்கிய சம்பவம் தொடர்பான சந்தேக நபர் நேற்று முன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அநுராதபுரம் மஜிஸ்திரேட் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதே சமயம், உட்கட்சிப் பூசல்களே இவர் மீதான தாக்குதலுக்கு காரணம் எனவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் அனுகூலங்களில் இதுவும் ஒன்றெனவும் வேறு சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ)

கடந்த மாதம் 21 ந் 22 ந் திகதிகளில் வலம்புரியில் வெளியான வரலாறும் சமூகக்கல்வியும் பகுதி 1 ற்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 3 | 2) | 4 | 3) | 1 |
| 4) | 3 | 5) | 4 | 6) | 1 |
| 7) | 4 | 8) | 1 | 9) | 2 |
| 10) | 4 | 11) | 2 | 12) | 2 |
| 13) | 3 | 14) | 1 | 15) | 3 |
| 16) | 2 | 17) | 4 | 18) | 1 |
| 19) | 3 | 20) | 3 | 21) | 1 |
| 22) | 4 | 23) | 2 | 24) | 3 |
| 25) | 4 | 26) | 3 | 27) | 4 |
| 28) | 2 | 29) | 4 | 30) | 1 |
| 31) | 2 | 32) | 4 | 33) | 1 |
| 34) | 3 | 35) | 2 | 36) | 2 |
| 37) | 3 | 38) | 3 | 39) | 3 |
| 40) | 2 | | | | |

# 125வது ஜெயந்தி விழா

[நல்லூர்]

சந்[illegible]டம் ஸ்ரீசிவகுருநாத குருபீ[illegible]தாநந்த மடத்தில், ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் 125-ஆவது ஜெயந்தி விழாவும் ஸ்ரீமத்கனகரத்தினம் சுவாமிகளின் 78-ஆவது குருபூசை விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

குரு பீடாதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகளின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்ணிசைமாமணி வேலுப்பிள்ளை சிவஞானம், சங்கீத பூஷணம் ஏ. கே. ஏரம்பமூர்த்தி, கவிஞர் இராசையா குகதாசன், அருளிசையரசு, 'பாலாறாவாயன்' ஆகியோரின் பண்ணிசை நிகழ்ச்சி இடம் பெற்றது. (த-103)

## இன்று ஒரு தகவல்

### கர்வம் அடைவதால் நன்மைகள்எதனையும் அடையமுடியாது

அர்ஜுனன் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு தென்னிந்தியாவுக்கு வந்தான். ராமசேதுவை அடைந்தபோது அவன் இலங்கைக்குக் கற்களால் அடுக்கிகட்டப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தான். அப்போது ஒரு சிறு குரங்கு அங்கே நடமாடிக்கொண்டு இருந்தது. அதைப்பார்த்து அர்ஜுனன் சிரித்தான். 'ஏன்சிரிக்கிறாய் வீரனே?' என்று அந்தக் குரங்குகேட்டது.

'இராமன் சிறந்த வில்வீரனாயிற்றே? அவன்ஏன் இலங்கைக்குக் கடலைக்கடந்து செல்ல அம்புகளால் ஒரு பாலம் கட்டி இருக்கக் கூடாது?, போயும் போயும் உன்னைப்போன்ற குரங்குகளின் துணையைவைத்துக் கொண்டா, இப்படிஒரு கருங்கற்பாலம் கட்டுவது?' என்று மிகுந்தகர்வத்துடன் கேட்டான் அர்ஜுனன்.

'அம்புகளால் 'பாலம்கட்ட முடியுமா என்ன?' என்று வியப்புடன் கேட்டது அந்தச் சிறுகுரங்கு. 'ஏன்முடியாது? நானே வேண்டுமானால் அம்புகளை தொடுத்து இங்கேஒரு பாலம்கட்டிக் காண்பிக்க முடியுமே' என்று சவால்விடுத்தான் அர்ஜுனன்.

'பாலம்கட்டலாம். ஆனால் அதில் என்னைப் போன்ற குரங்குகள் ஏறிநடந்தால் பாலம்தாங்குமோ என்னவோ? இடிந்துவிழுந்துவிட்டால் என்னசெய்வது? அதனால்தானோ என்னவோ இராமர் என்னைப்போன்ற குரங்குகளின் உதவியுடன் ஒரு கருங்கற்பாலமே கட்டியிருக்கிறார்' என்றதுகுரங்கு.

'ஏ, குரங்கே! என்னிடமா இந்தக்கேள்வியைக் கேட்கிறாய்? இதோபார் என்னுடைய சாதனையை! இப்போதே அம்புகளைத் தொடுத்து ஒருபாலம் அமைத்துக்காட்டுகிறேன் நீ அதன் மேல்ஏறிநட! பாலத்துக்கு ஏதாவது ஆபத்துநேரிட்டால் நான் தீமூட்டி அதில்குதித்து உயிர்தியாகம் செய்து கொள்வேன்' என்று கோபத்துடன் சொன்னான் அர்ஜுனன்.

உடனே அந்தச்சிறு குரங்கு பெரியஉருவம் எடுத்தது. கையில் கதைஏந்தி அர்ஜுனன்முன் நின்றான் அனுமான்.

'பார்த்தா! என்னுடைய தலைவர் இராமரையா இழித்துப்பேசுகிறாய்? உன்னால் ஆனதைப்பார். வலுவுள்ள அம்புகளால் பாலம்

அந்தப்பெருமை சிலநிமிடங்களுக்கே நிலைத்தது. அனுமான் உயரேகிளம்பி வானத்தில்பறந்து அங்கிருந்து நேரே பாலத்தின் மீது வந்து இறங்கினான். பாலம் நொறுங்கிவிட்டது.?

அர்ஜுனனைப் பார்த்து ஏளனமாக சிரித்தபடி ''என்ன அர்ஜுனா? என்ன செய்யப் போகிறாய் இப்போது? சவால் விட்டபடி உயிர்த் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றாயா?'' என்று கேட்டான் அனுமான். அர்ஜுனன் தலையைக் குனிந்துகொண்டான்; தீயை மூட்டச்சொன்னான்: அதில் குதித்து உயிரைவிட அக்கினியை மும்முறை வலம் வந்தான். அப்போது கிருஷ்ணர் அங்கே தோன்றினார்:

' என்ன அர்ஜுனா! என்ன நடந்தத''? என்று ஏதும் அறியாதவரைப் போல்க் கேட்டார், அர்ஜுனன் சொல்லத் தொடங்குமுன் அனுமான் எல்லாவற்றையும் சொல்லி, ''அர்ஜுனன் உயிரை விட்டே ஆக வேண்டும் என்றான். ''நல்லது, இந்தச் சவால் விட்டதற்கும் நடந்ததற்கும் யார் சாட்சி? பெரியார் ஒருவரை வைத்துக் கொண்டு அல்லவா இந்தப் போட்டியைத் தொடங்கி இருக்கவேண்டும்?'' என்று கேட்டார் கிருஷ்ணன். அனுமான் மிகுந்த பெருமையுடன் ''இப்போது மீண்டும் செய்து பார்த்தால் போயிற்று! என்னால் அந்த அம்புப்பாலத்தை நொறுக்க முடியாதா என்ன?'' என்றான்:

கிருஷ்ணர் சிரித்துக் கொண்டே அர்ஜுனனை அம்பு பாலம் அமைக்கச் சொன்னார். அனுமன் தனது பலம் கொண்டவரையில் ஏறி மிதித்து நடந்தான்; பாலம் அசைந்து கொடுக்கவில்லை. அனுமான் தலையைக் குனிந்து கொண்டான். அர்ஜுனன் நன்றியுடன் நிமிர்ந்து பார்த்தான்; கிருஷ்ணரின் தோள்களிலும் முதுகுகளிலும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது,

''என்ன சுவாமி; என்ன நடந்தது?'' என்று பதறிப் போய்க் கேட்டான் அர்ஜுனன்.

''உன் அம்புப் பாலத்தை நான்தான் முட்டுக் கொடுத்துத் தாங்கினேன். அனுமான் குதித்தபோது என்மீது ஏற்பட்ட காயங்கள் இவை; பின்னே உன்னுடைய அம்பு

# கைக்குண்டுடன் காணப்பட்ட சிறைக்கைதி சுட்டுக்கொலை

## நீர்கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் கைக்குண்டுடன் காணப்பட்ட சிறைக்கைதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து கைதிகளை நீதிமன்றில் ஆஜர் செய்யும் பொருட்டு சிறைக் காவலர்கள் கொண்டு செல்ல முயன்றனர்.

அவ்வேளை, கைதிகளில் ஒருவர் கைக்குண்டொன்றினைக் காட்டி, தன்னையும் தனது சக பாடிகளையும் உடன்விடுதலை செய்யாவிட்டால் கைக்குண்டினை வெடிக்க வைக்கப்போவதாக மிரட்டினார்.

நிலைமையை உடனேயே நீர்கொழும்பு பொலிஸாருக்கு சிறைக் காவலர்கள் எடுத்துரைத்த தன் பேரில் பொலிஸார் அவ்விடம் விரைந்து கைதிவசமிருந்த கைக்குண்டினை சாமர்த்தியமாக மீட்டெடுத்ததுடன், அவரையும் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவத்தினை அடுத்து. சிறைக்காவலில் இருந்த கைதி வசம் கைக்குண்டு எவ்வாறு வந்தது என்பது தொடர்பான விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (உ)

# முறியடிப்புச் சமரில் உயிரிழந்த புலிகள் விபரம்

[வவுனியா]

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதியில் இராணுவ முன்னேற்ற நடவடிக்கையை முறியடிப்பதில் ஈடுபட்ட போது தமது தரப்பில் உயிரிழந்துள்ள போராளிகளின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு:—

● பைந்தமிழன் (ரேட்மன்ஸ் எரிக்ரமிக்ஜன்) கிளிநொச்சி

● இசைமாறன் (அன்ரன்) யாழ்ப்பாணம்

● சிறுமி (திருஞானபீடம் லோறன்ஸ்) மன்னார்

● அழகன் (தம்பிப்பிள்ளை சுரேஸ் குமார்) கிளிநொச்சி

● இந்து (ஜோசெவ் புவனேஸ்வரி) யாழ்ப்பாணம்

● கலையரசி (கங்கேஸ்வரன் மாலினி) மட்டக்களப்பு

● மரகதா (ஜம்புநாதன் நிர்மலா) மட்டக்களப்பு

● லெப். ஈழவேந்தன் (நகுலேந்திரன் ஜேசுதாஸ்) யாழ்ப்பாணம்

● லெப். கேணல் இரும்பொறை (ஆசிர்வாதம் றமேஸ்) யாழ்ப்பாணம்

● கப்டன் தமிழ்க்காவலன் (சீவரத்தினம் கனிஸ்ரதாஸ்) யாழ்ப்பாணம்

● அகன்புலி (ஞானப்பிரகாசம் பிரதீபன்) திருகோணமலை

● 2ம் லெப். சர்மிளா/மணிமேகலை (நல்லையா மேரிறூமினா) வவுனியா

● லெப். அமுதநகை (யோகேஸ்வரி சரணதேவி) யாழ்ப்பாணம்

● கப்டன் இசையதன் (கந்தசாமி ஸ்ரீதரன்) மன்னார்

● சசி/நவனிதா (தியாகராஜா சகாயராணி) மன்னார்

● 2ம் லெப். பூங்கிளி [பொன்னுத்துரை சந்திரமதி] வவுனியா

● மேஜர் செந்தூரன் (யோகராஜா ராஜ்குமார்) ஆனையிறவு

● 2ம் லெப். அன்புமாறன் (பொன்னுத்துரை உதயகுமார்) யாழ்ப்பாணம்

● கப்டன் சங்கர்

# யாழ். குடாநாட்டில் சத்தங்கள் ஓரளவுதணிந்தன

(யாழ்ப்பாணம்)

குண்டுச் சத்தங்களால் அதிர்ந்த வண்ணமிருந்த யாழ்.குடாநாட்டில் நேற்று அமைதி நிலவியதை அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்து மக்கள் வழமைபோல் தமது பணிகளில் ஈடுபட்டனர்.

இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்ற மக்களில் சிலர் மீண்டும் தமது வீடுகளுக்குச் செல்வதையும் நேற்று காணக் கூடியதாக இருந்தது.

ஒருசில பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகள் நேற்று வழமைபோல் இயங்கின.

இதேசமயம், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி நேற்று இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உத்தேச அரசியல் யாப்பு

# சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் விரைவில்

(யாழ்ப்பாணம்)

உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்தம்பற்றிய முழுநாள் கருத்தரங்கு யாழ். நகரில் நடத்துவதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் கல்விமான்கள், அரசியல் சட்ட நிபுணர்கள் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கருத்தரங்கில் விவாதம் ஒன்று நடத்தவும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாக அக்கட்சியின் தலைமைப் பீடம் தெரிவித்துள்ளது. (க)

# பொதுத் தேர்தலில் வென்றால் "ஸ்ரீலங்கா ஈழம் குடியரசு" அமைப்போம்

தலைவா இராமனையா இழித்துப்பேசுகிறாய்? உன்னால் ஆனதைப்பார். வலுவுள்ள அம்புகளால் பாலம் கட்டு. நான்அதில்ஏறி நடந்து அதைப் பொடிப்பொடியாக்கிக் காட்டுகிறேன்என்றான் அனுமான்.

அர்ஜுனன் தனது காண்டீபத்தைஎடுத்து நாணேற்றினான். சரமாரியாக அம்புகளைப் பொழிந்தான். அவை ஒன்றோடொன்று கோத்துக்கொண்டு பாலமாக அமைந்தன. அர்ஜுனன் பெருமிதம் ததும்பும்முகத்துடன் கம்பீரமாகநின்றான். ஆனால்

...துத தாங்கினேன். அனுமான் குதித்தபோது என்மீது ஏற்பட்ட காயங்கள் இவை. பின்னே உன்னுடைய அம்புகளின் பலத்தினாலா பாலம் நின்றதென்று எண்ணினாய்?'' என்று கேட்டார் கிருஷ்ணர்.

முதலில் அர்ஜுனன்— பின்னர் அனுமான் — இருவருக்குமே கர்வபங்கம் ஆயிற்று! எவ்வளவு பெரியவர் ஆனாலும் கர்வமே கொள்ளக் கூடாது!

- புனிதம் அருளும் புட்டபத்தி.

# தமயந்தி தர்ஷா தலைமையிலான விளையாட்டு வீரர்குழு நேற்று அவுஸ்திரேலியா பயணம்

## சுசந்திகாவும் இணைவார்

சிட்னியில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கைக் குழு நேற்று அவுஸ்திரேலியா பயணமாகியது.

18 வீரவீராங்கனைகளைக் கொண்ட இக்குழுவிற்கு பிரபல ஓட்ட வீராங்கனை தமயந்தி தர்ஷா தலைமை தாங்கிச் செல்வதுஇங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போது ஜப்பானில் அமெரிக்கப்பயிற்சியாளரிடம் பயிற்சி பெற்றுவரும் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க வரும் ஞாயிற்றுக்கிழமை இக்குழுவுடன் இணைந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளசிட்னிஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் அரைவாசிக்குமேற்பட்டோர் குறித்த இடத்தினை சென்றடைந்துள்ளனர். (உ)

# "ஸ்ரீலங்கா ஈழம குடியரசு" அமைப்போம

## சோஷலிச சமத்துவக் கட்சி அறிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் சோஷலிச சமத்துவக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வில் புதிய விடயமொன்றை முன்வைத்துள்ளது.

இதன் பிரகாரம் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இலங்கைக்குள் தனித்தனியான அரசை அமைத்து அதனை ''ஸ்ரீலங்கா ஈழம் குடியரசு'' என அழைப்பதென அறிவித்துள்ளது.

சோஷலிச சமத்துவக் கட்சியின் இவ்வறிவித்தல் அரசியல் அவதானிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# உரும்பிராயில் மென்பந்து கிரிக்கெட் சீகொக் அணி வெற்றி

(சுண்டுக்குளி)

உரும்பிராய் ஞான பாஸ்கரோதய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டரீதியில் நடத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் அண்மையில் உரும்பிராய் ஜி. டி. எஸ். மைதானத்தில் இடம்பெற்றது.

7 வீரர்கள் பங்குபற்றும் 12 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் சீகொக் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய நெப்தேன் விளையாட்டுக் கழக அணியை 26 ஓட்டங்களால் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

இப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளருக்குரியபரிசை சஞ்சீவ் றொனியும், தொடரின் சிறந்த வீரனுக்குரிய பரிசை எஸ். சஞ்ஜித்தும், சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசை தனுசியத்தனும் சிறந்த பந்து தடுப்பாளருக்கான பரிசை எஸ். செல்வராஜ்சும் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் கலந்து கொண்டார். (த)

(பொன்னுத்துரை உதயகுமார்) யாழ்ப்பாணம்

- கப்டன் சங்கர் (புண்ணியன் சத்தியேஸ்வரன்) யாழ்ப்பாணம்
- கப்டன் குறிஞ்சி (இராசதுரை கோடீஸ்வரி) யாழ்ப்பாணம்
- 2ம் லெப். நிசாந்தி/ நிசாந்தினி (கணேசன் ஜெயந்தினி) புதுக்குடியிருப்பு
- கப்டன் சோழன் (இலட்சுமணன் கெங்காதரன்) யாழ்ப்பாணம்
- ஆனந்தன் (தர்மலிங்கம் கிருஸ்ணானந்தன்) யாழ்ப்பாணம்

சிறப்பு எல்லைப்படை வீரர்களான

- தீபன் (ஞானமனோகரன் மனோகீதன்) யாழ்ப்பாணம்
- பிரபு (இராசேந்திரம் பிரபாகரன்) கிளிநொச்சி
- சங்கர் (வேலுமலை ரசிக்குமார்) கிளிநொச்சி

# புதுப்பிக்கும் பணிகள்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கந்தர்மடம்ஜே-102 கிராமசேவை அலுவலர் பிரிவில் உள்ள குடியிருப்பாளர்களுக்கான பங்கீட்டு அட்டைகள் புதுப்பிக்கும்பணி நடைபெற்றது. (த-103)

## கள்ளச்சாராயம் காய்ச்சியோர் ஊரிலிருந்து தள்ளிவைப்பு நீதிபதி உத்தரவு

(சென்னை)
கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களை நீதிபதி ஊருக்குள் இருந்து தள்ளிவைத்தார்.
இச்சம்பவம் சென்னையில் உள்ள கிராமப்புறம்ஒன்றில் நிகழ்ந்துள்ளது.
கள்ளச்சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காக பெண்ணொருவர் உட்பட மூவரை கைதுசெய்து நீதியின்முன் நிறுத்தினர்.
இவ்வழக்கை விசாரித்த நீதிபதி அம்மூவரையும் 6 மாதங்கள் ஊருக்குள் நுழையக்கூடாதென தீர்ப்பளித்ததோடு அவர்கள் ஊரைவிட்டு வெளியேற உடன்நடவடிக்கை எடுத்ததாகவும் தெரியவந்துள்ளது. (உ-து)

## தமிழகத்தின் கோர விபத்து 3 பேர் பலி; 26 பேர் காயம்

(சென்னை)
தமிழ் நாட்டில் கிராமம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 3 பேர் ஸ்தலத்திலே பலியாகினர். 26 பேர் பலத்த காயமடைந்தனர்.
ஒருவானும் பேருந்து ஒன்றும் மோதியபோது பின்னால் வந்து கொண்டிருந்த லொறி ஒன்று இவற்றுடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.
26 பேரும் இராஜாஜி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் சிலர் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் மருத்துவ மனைவட்டாரங்கள் தெரிவித்தன. (து)

## ஐ.நா. அதிரடிப்படையை அமைக்க பிரிட்டன் வேண்டுகோள்

(லண்டன்)
குறுகியகால முன்னறிவிப்பில் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்துவதற்காக ஏதுவாக ஐ.நா.அதிரடிப்படையை அமைக்குமாறு பிரிட்டன் கேட்டுள்ளது.
அப்படைகளை மேம்படுத்த,படையினர்க்கு பயிற்சியளிக்க கல்லூரி ஒன்று அமைப்பது தொடர்பான யோசனைகளையும் பிரிட்டன் முன்வைத்துள்ளது. [உ]

அஸ்ஸாம்

## இராணுவ ஆராய்ச்சி நிலையத்தில் காரமான மிளகாய் கண்டுபிடிப்பு

(அஸ்ஸாம்)
உலகிலேயே மிகவும் காரமான மிளகாய் அஸ்ஸாம் மாநிலத்தில் அடையாளம் காணப்பட்டது:
இந்த ரகமிளகாய் முன்பு காணப்பட்ட அதி கூடியகாரமுள்ள மிளகாயிலும் இரண்டு மடங்கு கூடுதலான காரமுடையதாகக் காணப்படுகிறது.
இந்த மிளகாயின் எரிச்சலைக்குடி நீரினால் குறைக்க முடியாது.
பால் பண்ணைப் பொருட்களால் தான் தவிர்க்க முடியும் என்று உள்ளூர் சமயல்காரர்கள் கூறுகிறார்கள்.
இந்த மிளகாயின் தீவிர குணத்தை இராணுவ ஆராச்சிக் கூடமே கண்டு பிடித்தது. (து)

## வெள்ளப் பெருக்கு பற்றிய மதிப்பீடு இன்னமும் இல்லை

(டாக்கா)
கடந்த வாரம் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், பங்காளதேஷில் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ள போதிலும்
மேற்பட்ட பொதுமக்கள் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## றுவாண்டாவில் கோர பஸ் விபத்து 39 பேர் பலி; 100க்கு மேல் காயம்

(கம்பாலா)
றுவாண்டாவின் தலைநகர்

உலக தரிசனம்

### 6 மாத குழந்தை உயிர் தப்பியது

கம்பாலாவில் இடம் பெற்ற பஸ் விபத்தில் 39 பேர் பலியாகினர். நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயங்களுககு உள்ளாகினர்.
எதிரெதிரே வந்த இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதிலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.
கொல்லப்பட்டவர்களில் குழந்தைகள், பெண்கள், முதியோர் பலர் அடங்குவர்,
இச்சம்பவத்தில் பலர் அகப்பட்ட போதும், ஒரேயொரு 6 மாதக் குழந்தையொன்று
தெய்வாதீனமாக உயிர் பிழைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.
இக்குழந்தையை அரசசெலவில் வளர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

## பாகிஸ்தானுக்கு சர்க்கரை ஏற்றுமதி இந்தியத்தரப்பில் பெரும் முயற்சி?

(இஸ்லாமபாத்)
கடும் கருத்துமுரண்பாடுகள்கொண்டுள்ள இந்திய பாகிஸ்தான் நாடுகளிடையே வர்த்தகஉறவுகள் தொடர விருப்பதான இனிப்பான செய்தியொன்று அண்மையில் கிடைத்துள்ளது:
பாகிஸ்தானில் கரும்பு சாகுபடிமிக மோசமான நிலையை இவ்வருடம் எட்டியிருப்பதையடுத்து, அந்நாட்டு இருநிறுவனங்கள் இந்தியாவில்இருந்து சர்க்கரையை கொள்வனவுசெய்வதற்கு விண்ணப்பித்துள்ளன.
பாகிஸ்தானுக்கு சர்க்கரை ஏற்றுமதிசெய்பவிருப்பதை இந்தியதரப்பு ஒத்துக்கொண்டுள்ளபோதிலும் உலகசந்தையில் விற்பனையாவதைவிட அதிகவிலைக்கு விற்பனை செய்ய முடிவுசெய்திருப்பதாய் தெரியவருகிறது.
எனினும் உலகசந்தையில் கொள்வனவு செய்வதால் ஏற்படும் ஏற்றியிறக்கல் கூலியுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் சர்க்கரை கொள்வனவுசெய்வது பாகிஸ்தானுக்கு இலாபகரமானதாகவே அமையுமென அங்குள்ள அதிகாரிகள் கருதுவதாகவும் அறியமுடிகிறது.
இதேவேளை, எல்லைக்கப்பாலான பயங்கரவாதத்தை தூண்டிவிடும் பாகிஸ்தானின் பண்புமாறாதவரை இருநாடுகளுக்கிடையேயும் பேச்சுவார்த்தைஎன்ற பேச்சுக்கே இடமில்லைஎன கூறிவந்த இந்தியாவின் நிலைப்பாட்டில் வர்த்தக உறவுகள்மூலம் நெகிழ்ச்சித்தன்மை ஏற்படக் கூடிய வாய்ப்புகள்இருப்பதாக நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

## துபாய் நீதிமன்றில் கசையடி தண்டனை பெற்ற இலங்கைப் பெண்ணும் காதலரும்

(லண்டன்)
இலங்கைப் பெண்ஒருவருக்கும் அவரது இந்தியக் காதலருக்கும் துபாய் நீதிமன்றம் கசையடி வழங்கியுள்ளதுடன் சிறைத்தண்டனையும் வழங்கியுள்ளது:
தகாத உறவு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டு நிரூபணமானதாலேயே மேற்படி தண்டனை வழங்கப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது:
இலங்கைப் பெண்ணுக்கு 100 கசையடிகளும் ஒரு வருட சிறைத்தண்டனையும் வழங்கியிருப்பதுடன் அவரது இந்தியக் காதலருக்கு 90 கசையடிகளும் 10 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது:
இவர்கள் இருவரதும் தண்டனைக்காலம் முடிவுற்றதும் சொந்த நாடுகளுக்குத் திருப்பியனுப்பப்படவுள்ளனர். (உ)

## மும்பை மேயர் கொலை முயற்சி வழக்கில் 3 கொள்ளையருக்கு மரணதண்டனை

(மும்பை)
மும்பையில் 3 கொள்ளையர்களுக்கு மேயர் சம்பந்தப்பட்ட வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது,
துபாயில் தஞ்சமடைந்துள்ள நாஜிக் குப்பலைச் சேர்ந்த இப்பிராஹாம் குழுவைச் சேர்ந்த3 கொள்ளையர்களுக்கு இத் தண்டனை வழங்கப்பட்டது.
அத்துடன் இவர்களோடு தொடர்புடையவர்களென நிரூபிக்கப்பட்டும் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு மும்பை மேயரை கொலை செய்ய முயற்சித்ததாகவும் மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்டு மூவரைத் துப்பாக்கியால் சுட்டதாகவும் கைதுசெய்யப்பட்டு தொடரப்பட்ட வழக்கிலேயே மேற்படி மும்பை உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## வெள்ளப் பெருக்கு பற்றிய மதிப்பீடு இன்னமும் இல்லை

(டாக்கா)

கடந்த வாரம் பெய்த பெரு மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், பங்காளதேஷில் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ள போதிலும் அது குறித்த மதிப்பீடுகள் இன்னமும் எடுக்கப்பட வில்லை என அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வெள்ளப்பெருக் கினால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள் ளனர்.

வெள்ளப் பெருக்கில் அகப்பட்டு சிறுவர்கள் உட் பட 10 பேர் உயிரிழந்திருப்ப தாகவும் அவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ)

## 2 ஆயிரம் ஆண்டுக்கு முந்திய மனிதஉடல் உப்புச் சுரங்கத்தில் கண்டுபிடிப்பு

(தெஹ்ரான்)

மேற்கு ஈரான் பகுதியில் உள்ள ஹம்கிலோ என்ற கிராமத்தில் உப்புச் சுரங்கம் ஒன்றில் மனித உடல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவ் உடல் மனித உருவின் அரைப் பகுதியை கொண்டிருந்ததுடன் அந்தப் பாதி உடலைக் கொண்டு அது சமீபத்தில் இறந்ததாகக் கருத இடமில்லை என்று சொல்லப் பட்டது.

காலில் அணிந்திருந்த காலணியும் அதனுடன் காணப்பட்ட சில ஆயுதங்களும் மிகவும் பழமையானதாக இருப்பதால் தொல்பொருள் ஆய்வாளர்களின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

கிடைத்த அந்த அரைகுறை மனித உடலை பரிசோதனை செய்த போது பல அதிர்ச்சி தரும் உண்மைகள் தெரியவந்தன.

அந்த உடல் வேட்டையாடுபவனுடையதாகவோ அல்லது வேட்டைக்கு வந்த இளவரசனுடையதாகவோ இருக்கலாமென்றும் இது 2 ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட உப்பு மனிதன் சடலமென்றும் சொல்லப்பட்டது.

இந்த அரைகுறை மனிதனின் உடலும் உடமைகளும் எந்தவித பாதிப்புமில்லாமல் உப்புச் சுரங்கத்தில் இருந்து எடுக்கப்பட்டு இப்பொழுது ஈரான் நாட்டு தேசிய மியூஸியத்தில் வைக்கப்பட்டுள்ளது. (து)

(மும்பை)

மும்பையில் 3 கொள்ளையர்களுக்கு மேயர் சம்பந்தப்பட்ட வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

துபாயில் தஞ்சமடைந்துள்ள நாஜிக் குப்பலைச் சேர்ந்த இப்பிராஹாம் குழுவைச் சேர்ந்த3 கொள்ளையர்களுக்கு இந் தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன் இவர்களோடு தொடர்புடையவர்களென நிரூபிக்கப்பட்டும் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மும்பை மேயரை கொலை செய்ய முயற்சித்ததாகவும் மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்டு மூவரைத் துப்பாக்கியால் சுட்டதாகவும் கைதுசெய்யப்பட்டு தொடரப்பட்ட வழக்கிலேயே மேற்படி மும்பை உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட மூவரும் மற்றும் அதனோடு தொடர்புடைய மூவரும் சேர்ந்து 36 லட்சம் ரூபா தண்டனைப் பணமாக கட்டவேண்டும் எனவும் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் நீர்ப்புப் பணம் துப்பாக்கிச்சூட்டில் பாதிக்கப்பட்டோருக்கு கொடுக்கப்படும் என்று நீதித்துறை அறிவித்துள்ளது. (து)

## பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட தூதரக அதிகாரியின் புதல்விகள்

### இந்திய தூதரகம் பலத்த ஆட்சேபம்

[இஸ்லாமபாத்]

இஸ்லாமபாத்தில் இந்தியத் தூதரக அதிகாரியின் மகள்மார் இருவர் பாகிஸ்தானியரால் தகாத வழிக்குட்படுத்தப்பட்டனர்.

மேற்படி அதிகாரியும்மனைவியும் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த சமயம் பார்த்து தூதரக அதிகாரியின் இல்லத்துள் புகுந்தவர்களால் தகாத சம்பவம் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தானிய உளவுத்துறையினர் கண்காணித்திருந்த போதும் இச்சம்பவம் நடைபெற்றமை இந்தியாவிற்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து இஸ்லாமபாத்திலுள்ள இந்திய தூதரக அதிகாரி பாகிஸ்தான் வெளியுறவுச் செயலரிடம் அறிவித்ததுடன் தனது ஆட்சேபத்தையும் தெரிவித்துள்ளார்.

உளவுத்துறையினர் இருந்த போதும் இது நடந்ததிற்கு தாம் பெரிதும் வருந்துவதாகவும் தகுந்த நடவடிக்கையெடுக்கப்படுமென்றும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் தெரிவித்தார்.

இதே வேளை புதுடில்லியிலுள்ள பாக். தூதுவர் அழைக்கப்பட்டு இந்த விபரத்தை இந்தியா தெரிவித்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## ஸ்பெயின் பிரிவினைவாத தலைவருக்கு 2 ஆயிரத்து 239 வருடசிறை வாழ்வு

(லண்டன்)

ஸ்பெயின் குற்றவாளி ஒருவருக்கு இரண்டாயிரத்து 239 வருடகாலம் சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டும் என அரசதரப்பு சட்டவாளர் ஒருவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஸ்பெயினில் இயங்கும்பாகி பிரிவினைவாதகுழுவின் தலைவர் கபிற்றோ என்பவருக்கே மேற்படி தண்டனை வழங்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஸ்பெயினில் இடம்பெற்ற குண்டு வெடிப்புஒன்றின் சூத்திரதாரி என்றவகையில் இவர்மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இவர்மீது மேலும் 11 படுகொலை வழக்குகளும் 83 கொலைமுயற்சி வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், மேற்படி குற்றச்சாட்டுக்காக கடந்த 92 ஆம் வருடம் பிரான்ஸில் கைதான 46வயதுடைய கபிற்றோ, அங்கு சிறைவாழ்வின் ஒருபகுதியை அனுபவித்தபின் மீண்டும் சொந்தநாடு அனுப்பப்பட்டுள்ளார். (உ)

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன்தொழில் :
- குறள் -

# வலம்புரி

## மக்களும் தேர்தலும்

இன்று யுத்த பூமியில் தேர்தல் புளக்காரங்கள் கலகலப்பாக நடைபெறுகின்றன. மக்கள் உரிய உணர்வுடனும் உற்சாகத்துடனும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் அகதி வாழ்வு, அன்றாட உயிரிழப்புக்கள், நாளைய பற்றிய நிச்சயமின்மை என்பனவாம். யுத்தம் நிறுத்தப்பட்டு இயல்பு வாழ்க்கை மேலோங்கியுள்ள நிலையில் தேர்தல் வருமானால் தெளிந்த சிந்தையோடு வாக்கு பரிமாற்றம் செய்ய முடியும்.

வீதியில் பிணவாடை, வைத்தியசாலையில்பிணக் குவியல். எல்லாவற்றிற்கும் மேலாக இறந்தஉடல்களை இம்சைப்படுத்தும் அலங்கோலம், அவல நிலை. வீரக்கல் நாட்டும் வரலாறு உண்டு. வீணர்கள், வம்பர்கள் கொச்சைப்படுத்தும் அவல வாழ்வு மலிந்த வேளையில் தேர்தல் தலை நீட்டுகிறது.

அரசியல் ஸ்த்திரம்நாட்டுக்குத் தேவை நாட்டிலே உள்ள இனங்கள் பங்கேற்றுக்கொள்ள வேண்டிய தேவையும், உரிமையும் உண்டு. ஆனால் ஒரு வேளைக்கஞ்சிக்கு ஏங்கும் மண்ணின் மக்களுக்கு மனநிம்மதியேது தவிச்சமுயல் அடிப்பது போல, நாய்க்கு எலும்புத் துண்டைப் போடுவது போலமதுவும், பணமும் புனித வாக்கை உறிஞ்சக்கூடாது. மக்கள் சிந்தையற்ற மந்தைகள் என்று எவரும் சிந்திக்கக்கூடாது.

மக்கள் பிரதிநிதிகளாக வர விரும்புபவர்கள் தொண்டுள்ளம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆமை தலையை நீட்டி இழுப்பது போல காலத்துக்குக் காலம் தலை காட்டும் பிரதிநிதிகள்எமக்குவேண்டியதில்லை. மக்களின் துன்பதுயரங்களில் பங்கு கொண்டு அவர்களுக்காக உழைப்பவர்களையே மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

தேர்தல் காலங்களில் மட்டும் முகாமிடுதலும் வந்தவேகத்தில்பறப்பதும் ஒவ்வாததொன்று. அன்றியும நிரந்தர முகாம் வாழ்க்கை முதலில் ஒழிய வேண்டும். கையேந்தும் இழிநிலை போக வேண்டும். கொடியயுத்தம்நிறுத்தப்படவேண்டும். மேலே கூறிய கருத்துக்களை நிலை நாட்ட வேண்டுமானால் அவாவிறுத்து அனைத்துக் கட்சிகளும் இந்த நிலத்தில் தேர்தல் சூழ் நிலை இல்லை என்று உலகறியச்செய்தல் வேண்டும். அது தான் நடக்கவில்லையே.

- அன்புடன் ஆசிரியர்

# பார்ப்போர் உள்ளங்களை கொள்ளைகொண்ட முடமாவடி பூங்கனிச் சோலைக் கண்காட்சி

காற்றுக்கு பூக்கள் சொந்தம் பூவுக்கு வாசம்சொந்தம் வாசத்திற்குச் சொந்தக்காரி ...... என்ன ''கண்ணன் வருவான்'' கதை சொல்லுவான் என நீங்கள் கருதினால் முழு ஏமாற்றம்தான் பூங்கனிச் சோலையினுள் நுழைந்த போது இப்பாடல் தென்றலோடு கலந்து செவிகளினுள் நுழைந்து கொண்டிருந்தது. நவீன தண்ணீர் சிந்திகளினால் விசிறப்பட்ட நீர்த்திவலைகள் மேனியை நனைத்தன என்ன ஆச்சரியமாக உள்ளதா?

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு முடமாவடியிலுள்ள பூங்கனிச் சோலையில் பூங்கன்றுகளின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது. 'வலம்புரி' குடும்பத்தினர் சார்பாக கலந்து கொண்டபோது அதன் உரிமையாளர்கள் பன்னீர் தெளித்து வரவேற்றனர் அலங்கார வளைவினூடாக உள்நுழைந்ததும் நீர்த்தடாகத்தில் அல்லி நீரோற்பலம் வரவேற்று சிரித்தன. அப்பால் சென்றதும் மீன் தொட்டியடியில் பலவர்ண மீன்கள் துள்ளிக் குதித்தன.

பசும் புற்றரைகள் ஒழுங்காக வெட்டப்பட்டு பச்சை கம்பளம் விரித்தது போல் காட்சியளித்தன ''இங்குள்ள புற்களை மிதிக்கும் போது எங்களுக்கு வலிக்கிறது'' என்று மனம் நொந்தார்கள் பல்கலை மாணவர்கள்.

நடைபாதை வழியே அலங்கார வளைவுகளினூடாக சென்றபோது சைப்பிரஸ் அலக்ரீரியா அந்தூரியா போன்ற மேல் நாட்டுத் தாவரங்கள் கண்ணையும்கருத்தையும் கவர்ந்தன.

இங்கு 125 வகையான குறோட்டன்கள் 15 இனசெவ்வரத்தைகள் 6 இனமான றோஜாச் செடிகள் உள்ளதாக உரிமையாளர்கள் விபரித்தனர். அவர்கள் இவற்றைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்துசேர்ப்பதிலும் பராமரிப்பதிலும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இன்னொரு அபூர்வ இனத் தாவரத்தை அவர்கள் எமக்கு காண்பித்தனர். அத்தாவரத்தின் இலைகள் இப்போது பச்சையாக உள்ளன. டிசெம்பர் மாதம் பிறந்ததும் இலைகள் சிவப்பாக மாறி விடும். இதை கிறிஸ்மஸ் செடி என அழைக்கிறார்கள்.

### அறிவு தேடல்

இக் கண்காட்சியில் பல் கலைக்கழக மாணவர்கள் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கு பற்றியிருந்தனர். 'போர்க்காலசூழ்நிலையிலும் இப்படியான தொரு கண்ணுக்கு கவர்ச்சியும் அறிவுத் தேடலுக்கு வடிகாலும் அமைக்கும் வகையில் பூங்காவை அமைத்ததற்கு எமது மாணவ சமுதாயத்தின் நன்றியைத் தெரிவிக்கிறோம்'' என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டனர் மகாஜனக் கல்லூரி மாணவர்கள்.

அரியாலை நிருபர்
எம். எஸ். எஸ் கீர்த்தி

அப்பால் சென்ற போது ஒரு பகுதியில் பழமரக் கன்றுகள் காணப்பட்டன. கொய்யா, தோடை, எலுமிச்சை, மா, பலா, தென்னை உட்பட அனைத்து மரக்கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன.

### மலை அருவி

நிகழ்வுகள் யாவும் வீடியோ செய்யப்பட்டு ஒரு புறத்தில் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. புயந்தாஸ் என்ற பூச் செடி சிவப்பு றோஸ் நிறங்களில் பூத்துக் குலுங்கியது பூங்காவின் ஒரு மூலையில் மலை அருவியை அமைத்திருந்தார்கள். முயல், புறா, லவ்பேட்ஸ் போன்ற பிராணிகளும் கூடுகளில்காணப்பட்டன. காதல் பறவைகளைத் திறந்து விடவும்' என்று தனது ஏக்கத்தை வெளியிட்டார் காதல் பித்தர் ஒருவர்.

சிறுவர்களுக்கான ஊஞ்சல் விளையாட்டுப் பொருட்களும் அமைக்கப்பட்டிருந்தன. பாடசாலை மாணவர்கள் இங்கு வருகை தந்து பார்வையிட்டு தாவர இனங்கள் பற்றிய அறிவைப் பெற்றுச் செல்கின்றனர் தினமும் இங்கு வீடியோ மிக்சிங் நடை பெறுவதாக பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற சிறுகைத்தொழில் தொழிற்றுறையின் கண்காட்சியில் இவர்களும் பங்கு பற்றியிருந்தனர். மேலும் யாழ். இந்து மகளிர் கல்லூரி யாழ். மத்திய கல்லூரி பூந்தோட்டங்களும் இந் நிறுவன உரிமையாளரின் கைவண்ணத்தில் உருவானவை ஆகும். இவ்வருடம் மார்ச் மாதமும் இவர்கள் இங்குகண்காட்சியை நடத்தி இருந்தனர்.

இங்கு அழகிய பந்தல்களில் காணப்படும் மஞ்சல்கோரிண் மலர்கள் கண்ணைக் கவர்ந்தன. இதன் விற்பனையும் அமோகமாக நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது.

'இன்றைய சூழ்நிலையில் இயற்கைக் காட்சிகளான பூங்கன்றுகள் அழிந்து போயுள்ள நிலையில் இயற்கையை எமது கண் முன் கொண்டு வந்து நிறுத்திய உங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன் என்று தனது வாழ்த்தை தெரிவித்தார் ஒருபார்வையாளர்.

அங்கு காணப்பட்ட சைப்பிரஸில் பலவகைகள் காணப்பட்டன. நீலம், பச்சை' மஞ்சள் கலந்த இனம், வெள்ளை பச்சை கலந்த இனம் என பல வகைகள் இவை மிலேனியம் ஆண்டின் புதுமைகள்.

'உங்களது அழகான பூந்தோட்டம் எந்த தரப்பினரது இதயத்தையும் கொள்ளையிடும் என்பதில் ஐயமில்லை. கலை உணர்வுமேலும் வளர்க என்று வாழ்த்தினார் ஒரு அபிமானி தனி நபரால் மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சி மென் மேலும் பல்கிப் பெருகி பயன் கொடுக்க வேண்டும் என்பதே எமது வேணவா.



## சாயி அருளமுதம்
### கடவுளுக்கு நன்றி செலுத்துவதுஎப்படி?

தொட்டிலில் குழந்தை அழும்போது தாய்க்குத் தெரியும் காரணம் என்னவென்று. பசியினால் ஏற்பட்ட அழுகையா, எறும்பு கடித்ததா, துணி மாற்ற வேண்டுமா? அல்லது வயிற்றில் வாயுத்தொந்தரவா என்று அவள் உடனே தொட்டிலை நோக்கி ஓடுகிறாள் குழந்தையைஅள்ளி எடுத்து என்ன செய்யவேண்டுமோ அதை செய்து, மீண்டும் குழந்தையை அமைதியாகத் தொட்டிலில் உறங்கச் செய்கிறாள். தாயைத்தவிரகுழந்தையின் அழுகைக்குக் காரணம் அறிபவர்யாருமில்லை மற்றவர்களுக்குக் குழந்தையின் அழுகைக்குரல்கள் ஒரே மாதிரியாகத்தான் தோன்றும்தாய்மட்டுமே அந்த அழுகைக்குஉண்மையான காரணம் என்னஎன்றுஅறிவாள்.

குழந்தை ஒரு நாள் கேட்டது. அம்மா, நான் அழும் போதுஒவ்வொரு முறையும் ஓடிவருகிறாய், அழுகையின் காரணம் அறிந்து என் துன்பத்தைத் தீர்க்கிறாய் எந்த வேலையில் இருந்தாலும், எவ்வளவுதான் மும்முரமாக இருந்தாலும், நீ உடனே ஓடிவர மட்டும் மறப்பதில்லை என்னைக் கையில் ஏந்தி கொஞ்சி மகிழவும் தவறுவதில்லை இதையெல்லாம் எப்படி நன்றிக் கடனாகத் திருப்பித் தருவது? எப்படி என் அன்பை, நன்றியை உனக்கு வெளிக்காட்டுவது? தயவு செய்து சொல், நான் என்ன செய்ய வேண்டும்?

தாய் கூறினாள் நீ எப்போதும் சிரித்தமுகத்துடன் ஆனந்தமாக இருந்தாலே போதும். என் அன்புச் செல்வமே! இதை விட ஆனந்தம் எனக்கு வேறு ஏது? எனக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

ஸ்வாமியும் இப்படித்தான், அவரின் அன்பு ஆயிரம் தாய்க்குச் சமம். அவருக்கு நம் ஆனந்தமே பேரானந்தம்.

பாபா

## யுத்த முனையில்சிக்கிய இரு வயோதிபர்கள் இராணுவத்தால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதகாலமாக யுத்தமுனைப் பகுதியில் சிக்கியிருந்த இரண்டு வயோதிபர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இராணுவநடவடிக்கையின் போது இராணுவத்தால் மீட்கப்பட்டுள்ளனர்.

பொன்னர். கபிரியல் பிள்ளை (வயது75) நல்லம்மா (வயது73) ஆகியோரே அரியாலை சின்னாளங்கண்டு வீதிப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டவர்களாகும்.

கடந்த மே மாதம் ஒன்பதாம் திகதி இடம் பெற்ற யுத்த நடவடிக்கையின் போது மேற்படி பகுதி புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதென்றும் அன்று தொட்டுதாம் கையிருப்பில் இருந்த உணவுப்பொருட்களை கொண்டு வாழ்ந்து வந்ததாகவும். கடந்த திங்கள் காலை தண்ணீர் அள்ளச் சென்றபோது அப்பகுதியில் நடமாடிய இராணுவத்தினர் தம்மை மீட்டு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் தங்கவைத்து, பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்ததாக தெரிவித்தனர்.

அரியாலைப் பகுதியை பொறுத்தவரை பல வீடுகளும் குண்டுவீச்சுக்களால் சேதமடைந்திருந்தமையை தாம் அவதானித்ததாகவும், ஷெல்வீச்சுக்களுக்கு மத்தியிலும் பீதியுடனேயே தமது வாழ்நாளைக் கழித்ததாகவும் மேற்படி வயோதிபர்கள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட இவ்வயோதிபர்களில் நல்லம்மா என்பவர் ஷெல்வீச்சில் அகப்பட்டு கையில் காயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## ஐ. தே. க. ஆட்சிக் காலத்திலேயே கல்விக்கு முக்கியம் கொடுக்கப்பட்டது
### இராஜமனோகரி புலேந்திரன் தெரிவிப்பு

(வவுனியா)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்திலேதான் வவுனியாவில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இதனை பலரும் அறிவார்கள். மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தோம் என வன்னி மாவட்ட மேற்படி கட்சியின் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான திருமதி இராஜமனோகரி புலேந்திரன் வேட்பு மனுவை தாக்கல்செய்த பின்னர் உள்ளூர் செய்தியாளர்களுடன் பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாம் ஆட்சிக்கு வந்தால் மக்கள் தேசிய அடையாள அட்டையுடன் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் செல்லக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவோம. வவுனியாவிலுள்ள பாஸ் நடைமுறையை தளர்த்துவோம் எனவும் அவர் கூறினார்.

வவுனியா பிரதேசத்தில் அதிகளவு பால் உள்ளது. இங்கேயே பாலைபதனிடக்கூடிய தொழிற்சாலையை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். தொழில் ஊக்குவிப்பிற்காக பல திட்டங்களை அமுல் படுத்தி மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவோம் எனவும் திருமதி புலேந்திரன் மேலும் சொன்னார். வவுனியாவில் மூவின மக்கள் வசித்து வருகின்றனர் அனைவரையும் இலங்கை மக்கள் என்றே நாம் அணுகுகின்றோம் எனவும அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர்) அணி

நடைபெற உள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு தனது பிரச்சார நடவடிக்கையை ஈ. பி. ஆர். எல், எவ். [வரதர்] அணியினர் அளவெட்டி, சுன்னாகம் பகுதியில் முடுக்கி விட்டுள்ளனர்.

மனுவேல் மங்களநேசன் தலைமையிலான குழுவினர் வீடு வீடாக சென்று ஆதரவு தேடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே சில கட்சிகள் யாழ்ப்பாண பகுதியில்வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க-03]

## மத்திய வங்கியின் 50வது ஆண்டில் ஆயிரம்ரூபா குற்றி வெளியிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி தனதுஐம்பதாவதுநிறைவை ஒட்டி ஆயிரம் ரூபா நாணயத்தை வெளியிட்டுள்ளது. சில்வரினால் உருவாக்கப்பட்ட வட்ட வடிவமான இவ் ஆயிரம் ரூபா குற்றி 38.61 மி.மி விட்டத்தையும், 28.28 கிராம் நிறையையும் கொண்டது.

கடந்த மாதம் 28ந் திகதி மத்திய வங்கியின் 50வது நிறைவை ஒட்டி வெளியிடப்பட்ட இந்நாணயத்தின் நடுப்பகுதியில் மத்திய வங்கியின் கட்டட அமைப்பு பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## பஸ்வண்டிகள் நேருக்குநேர் மோதின நான்கு பேர் துடிதுடித்துப் பலி

(கொழும்பு)

கடற்படையினரின் பஸ் வண்டியும் பிரயாணிகள் பயணம் செய்த சொகுசு பஸ்சும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் நான்கு பேர் ஸ்தலத்தில் பலியானார்கள் 17 பேர் காயமடைந்தனர் பலியானவர்களில் புத்தபிக்கு ஒருவரும் அடங்குவார்

இக்கோர விபத்துச் சம்பவம் நேற்று நண்பகல் தம்புல்ல ஹபரண பிரதான வீதியில் இடம்பெற்றது.

இவ்விபத்தில் காயமடைந்தோர் கண்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-2)

# யாழில் யுத்தத்தை ஆரம்பித்து விட்டு நீதியான தேர்தலை நடத்த முடியுமா?

### ஜனாதிபதியிடம் தமிழ் காங்கிரஸ் கேள்வி

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கு திகதி குறித்து வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் சமயம் பார்த்து யுத்தத்தை ஆரம்பித்திருக்கும் அரசாங்கம் தேர்தலை எப்படி சுமுகமாக நடாத்தப் போகிறது என்று அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி, பொதுச்செயலாளர் அ. குமரகுருபரன் ஆகிய இருவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில் யாழ். மாவட்டத்தில் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது அரசு யுத்தத்தை ஆரம்பித்ததனால் சுமுகமான முறையில் நீதியாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடக்கும் என்பதை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும் என்றும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது (வ)

## நாளை செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள், நிவாரண விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் பெற்றோலிய கூட்டுத்தாபன பொறுப்பதிகாரிகள், பிரதேச செயலர்கள், பேக்கரி உரிமையாளர்கள் சங்கப்பிரதிநிதிகள், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார். (க-3)

## போதியளவு உணவு, எரிபொருள் கையிருப்பில் உண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மூன்று மாத காலத்துக்கு மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் செயலக களஞ்சியங்களில் கையிருப்பில் உள்ளதாக யாழ்.அரச அதிபர் கே. சண்முகநாதன் வலம்புரிக்கு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மாதம் தோறும்வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் போதியளவு கையிருப்பிலுள்ளதாகவும் செப்ரெம்பர், ஒக்டோபர் ஆகிய இரு மாதங்களுக்கான நிவாரணத்தை இம்மாதத்திலேயே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

இதேவேளை பாவனையாளர்களுக்கு தேவையான அளவு எரிபொருள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் கையிருப்பில் உள்ளதாகவும் வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [வ]

**யுத்த...**
நேற்றும் வட்டமிட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

ஆனால் இவை தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது. (ந-2)

**சந்திரிகாவின்...**
ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை நேற்று கண்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலும் ரணில் விக்கிரமசிங்கா உரையாற்றினார். (வ)

**புலிகளின்...**
யின் சடலங்களை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து இரண்டு வாகனங்களில் சடலங்கள் ஏற்றப்பட்டு பலாலி வீதியினூடாக எடுத்துச் செல்லப்பட்டபோது வீதியோரங்களில் மக்கள் கூடி நின்று பார்த்ததாகவும் தெரியவருகிறது. (க-3)

**ஸ்ரீ செல்வா**
[யாழ்ப்பாணம்]
முரளி றோஜா
நடித்த
**ஊட்டி**
CD புதிய பிரதி
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[இ 688]

**நேரடி...**
(கோவிந்தசாமி பவளநாயகி) மல்லாவி

- 2ம் லெப். தணிகைச் செல்வன் (இம்மானுவேல்பிள்ளை தயாபரன்) யாழ்ப்பாணம்
- கப்டன் கரன் (கிறிஸ்தோக்கிரம் பாலநாதன்) யாழ்ப்பாணம்
- கப்டன் அருட்குமரன் (பாலசிங்கம் பாலகாந்தீபன்) யாழ்ப்பாணம்
- 2ம்லெப். அன்புத்தமிழினி (அப்புத்துரை சௌந்தலாதேவி) யாழ்ப்பாணம்
- 2ம் லெப். அறிவினி (அன்னலிங்கம் சசிரேகா) கிளிநொச்சி
- லெப். தராங்கி (தர்மகுலசேகரம் தர்சினி) மல்லாவி
- லெப். நிறைவறிவு/மதியழகி (சுந்தரம் உதயகுமாரி) யாழ்ப்பாணம்
- லெப். கனிமொழி (சிவராசா சந்திரமதி) முல்லைத்தீவு
- கப்டன் கொழுமதி (அருணாசலம் ஜெயமாலா) மாங்குளம்
- அகரத்தேவன் (வெள்ளைச்சாமி சிறிதேவி) கிளிநொச்சி
- விடிவுமகள் (அந்தோனிப்பிள்ளை ஜெனோ) கிளிநொச்சி

எல்லைப்படை வீரர்களான

- பாலன் (இராசரத்தினம் சந்திரபாலன்) ஆனைவிறவு
- கரன் (கிருஸ்ணசாமி குருகரன்) யாழ்ப்பாணம்

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பெயர் விபரம் 5ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

**ஸ்ரீமாணியின்...**
திணைக்கள வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஸ்ரீமாணி அத்துலத்முதலி பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதாக இருந்த போதிலும் பின்பு சுயேட்சையாக போட்டியிட முடிவு செய்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

**லங்கா...**
செய்தித்தாள்களில் அறிவிக்கப்படும் எனவும் சிவில் நிர்வாகக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் கப்பல் இன்று புறப்படும் எனவும், பயண அனுமதியும், கப்பல் சீட்டும் பெற்றவர்களை இன்று காலை 8 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

**அமைச்சர்கள்...**
மாக அமைச்சர்கள் முக்கிய அரசியல் பிரமுகர்கள் ஆகியோருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதியனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரும் அதனை அண்டியுள்ள பகுதிகளும் விசேட பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டு விசேட ரோந்து நடவடிக்கைகள் வீதிச்சோதனைகள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இத்தீவிர ரோந்துப்பணிகளில் விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பொலிஸ் குழுக்களின் தேவைக்கென இருபது வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளதுடன், நாற்பது பொலிஸ் ரோந்துக் குழுக்களும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் சந்தேகத்திற்கு இடமானவர்களின் நடமாட்டங்கள் மிகவும் துல்லியமான முறையில் கண்காணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

**சபாநாயகர்...**
தெரியவருகிறது.

இதே வேளை சபாநாயகர் இரட்நாயக்கா பயன்படுத்தும் அரச வாகனங்களையும், ஏனைய அரச உடமைகளையும் உடனடியாக ஒப்படைக்குமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து அவருக்கு கடிதம் அனுப்பபட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது

இந்நடவடிக்கையானது கே. பி. இரட்நாயக்காவையும், லக்ஸ்மன் ஜெயக்கொடியையும் அரசியலிலிருந்து ஓரங்கட்டும் செயலென அரசியலவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

**கஜன்**
திரை
வல்வெட்டித்துறை
கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்
**கிழக்கு வாசல்**
காட்சி நேரம்
பி.ப 6.30 மணி
(இ-652)

வினையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

யுத்த அவலம் நீங்கி - உங்கள்
இயல்பு வாழ்க்கை திரும்பி
நிம்மதியான வாழ்வு நிலைக்க
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
உங்கள் வாக்குகளை அளியுங்கள்!
(ஈ.பி.டி.பி)



யாழ்நகரில் அண்மையில் ஈ. பி. டி. பி யால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் குறை தீர்க்கும் சேவை மையத்திற்கு 4000த்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்திருந்தனர்.
(இ/736)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.